1990 ஆகஸ்ட் 21] [டாக்டர் மு. கருணாநிதி]

உடனடி நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அன்னியில் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 5 லட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டு அந்தத் தொகையிலிருந்து இறந்தவர் குடும்பத்திற்கு தலா 25 ஆயிரம் ரூபாய் வீதம், மொத்தம் 16 பேர் இறந்ததில் 3 பேர் அடையாளம் தெரியாதவர்கள். 3 பேர் அரசு அலுவலர், மீதமுள்ள 10 பேருக்கு 25 ஆயிரம் ரூபாய் வீதம் தரப்பட்டது. அரசு அலுவலர் 3 பேர், அரசு முறைப்படி தரும் 40 ஆயிரம் ரூபாய் தவிர மேலும் 10 ஆயிரம் ரூபாய் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து அவர்களுக்கு வழங்கப்பட்டது. 23 பாதிக்கப்பட்ட கல் வீட்டின் உரிமையாளர்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபாய் வீதமும், பாதிக்கப்பட்ட 47 குடிசை வீட்டின் உரிமையாளர்களுக்குத் தலா 2 ஆயிரம் ரூபாய் வீதமும் காயம் அடைந்த 22 பேர்களுக்குத் தலா 500 ரூபாய் வீதமும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மூலமாக வழங்கப்பட்டுள்ளது. இப்போது அங்கே இந்தப் பிரச்சினை சம்பந்தமாக எவ்விதப் பதட்டமான நிலையும் இல்லை என்பதால் அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

4. கவன ஈர்ப்பு.

அருப்புக்கோட்டை வட்டத்திலும் மற்றும் அதைச்சுற்றியுள்ள பகுதிகளிலும் மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகம் சரியாகச் செயல் படாமல் இருப்பதாலும் புதிய வழித்தடங்களில் பேருந்துகளை விடாமல் இருப்பதாலும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல் குறித்து :

திரு. வே. தங்கபாண்டியன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமராஜர் மாவட்டத்தில் அருப்புக்கோட்டை வட்டத்திலும் அதை சுற்றியுள்ள பல்வேறு பகுதிகளிலும்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அருள்கூர்ந்து இங்கே நிகழ்ச்சி நிரலில் தரப்பட்டதை மட்டும் தான் படிக்கவேண்டும். நீங்கள் எழுதிக்கொடுத்ததையெல்லாம் படிக்கக்கூடாது.

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''காமராஜர் மாவட்டம் அருப்புக்கோட்டை பகுதிகளில் மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகம் சரியாகச் செயல்படாமல் இருப்பது குறித்தும் புதிய வழித்தடங்

களில் பேருந்துகளை விடாமல் இருப்பது குறித்தும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகம்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையில் அறிக்கை வைக்கப்பட்டு இருக்கிறது என்று மட்டும் தான் தெரிவிக்க வேண்டும்.

மாண்புமிகு மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகம் காமராஜர் மாவட்டத்தில் அருப்புக்கோட்டை, திருச்சுழி ஆகிய இரண்டு தாலூக்காக்களின் போக்குவரத்து தேவைகளை பூர்த்தி செய்து வருகிறது. ஏனைய விருதுநகர், திருவில்லிபுத்தூர் சாத்தூர், ராஜபாளையம் தாலுக்காகளின் தேவைகளை பாண்டியன் போக்குவரத்துக் கழகம் பூர்த்தி செய்து வருகிறது.

2. அருப்புக் கோட்டையில் மருதுபாண்டியன் போக்கு வரத்துக் கழக கிளை 1-4-1983 முதல் 7 நகர் பேருந்துகள் மற்றும் 3 புறநகர் பேருந்துகள் ஆக 10 பேருந்துகளுடன் ஆரம்பிக்கப்பட்டது. தற்சமயம் 18 புறநகர் பேருந்துகள் மற்றும் 24 நகர் பேருந்துகள் ஆக 42 பேருந்துகளுடன் இயங்கிக் கொண்டிருக்கிறது. நகர் பேருந்துகளை பல்முனைத் திட்டத்தின் கீழ் ஒன்றுக்கு மேற்பட்ட வழித்தடங்களில் இயக்கப்பட்டு வருகின்றன. 1-4-1983-க்குப் பிறகு 88 புதிய வழித்தடங்களில் பேருந்துகள் யக்கப்பட்டு வருகின்றன. மேலும் பொது மக்களின் வேண்டுகோளுக்கிணங்க வழித்தடங்களை நீட்டித்து இயக்க வாய்ப்புள்ள வழித்தடங்களை நீட்டித்து இயக்கியும் வருகிறது.

11-00 மணி

திரு. வே. தங்கபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகத்தின் தலைமையிடம் காரைக்குடியில் இருக்கிற காரணத்தால் 100 கிலோ மீட்டருக்கு அப்பாலுள்ள அருப்புக்கோட்டை பகுதியின் மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்கிற அளவுக்கு அவர் களுடைய பணிகள் நடைபெறவில்லை. கடந்த 6 மாதகாலத்தில் 27 பஸ் போராட்டங்கள் நடைப்பெற்றிருக்கின்றன. இந்த மிகப்

பெரிய பகுதியில் மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகம் இயங்காத காரணத்தால் மாவட்டத்தில் இருக்கிற 5 நகராட்சி களில் பாண்டியன் போக்குவரத்துக் கழகம் இயங்குவதைப்போல அருப்புக்கோட்டையையும் பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் கீழ் நிர்வாகத்தைக் கொண்டு வந்தால் இந்தச் சிரமங்கள் போக்கப்படும். அரசு அதுப்பற்றி பரிசீலிக்குமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள நிர்வாக வசதிக்கேற்றப்படி பிரித்து இருப்பதினுடைய அடிப்படையில் எந்த அளவிற்கு போக்குவரத்து வசதிகளை மேலும் விரிவாக்கலாம் என்று கருத்து அறிவதற்காகத்தான் சென்ற மாதம் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய கூட்டம் மருதுபாண்டியர் போக்கு வரத்துக் கழகத்தின் சார்பிலே நடத்தப்பட்டு உறுப்பினர்களுடைய கருத்துக்கள் எல்லாம் கேட்கப்பட்டு, அதனுடைய அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்தப் போக்குவரத்துக் கழகத்தினுடைய தலைமையகங்கள் மாற்றப்பட வேண்டும் அல்லது பிரிக்கப்படவேண்டும் என்பதான போன்ற கருத்துக்கள், நிபுணர் குழு அறிக்கை வந்ததற்குப் பின்னர்தான் அரசு இறுதியான முடிவிற்கு வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வே. தங்கபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய இறுதியான முடிவு வரும்வரைக்கு மாவது இடைக்காலத்திலே அந்தப் பகுதியினுடைய மக்களுடைய தேவைகளை அறிந்து புதிய வழித்தடங்களையும் அல்லது வேண்டிய இடங்களுக்கு வழித்தடங்களை நீட்டுகிற வேண்டு கோள்களையும் அரசு பரிசீலித்து உடனடியாக நிறைவேற்றுமா என்று தெரிந்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக அரசு பரிசீலித்து நிறைவேற்றும்.

5. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு 1990.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்:

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறி முகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''